**ஓம் ஈஸ்வராய நமஹ!**

# ஆத்ம விடுதலை என்றால் என்ன ?
## முருகப்பெருமானின் அருளுரை - 23 October 2019 அன்று உரைத்தது

ஆறுமுகா ஆறுமுகா

அருட்பெரும் சுடரே ஆறுமுகா

அன்பிற்கினிய குமரோனே

அகிலம் காப்பவனே

நற்செயல்கள் புரிந்திட அருளிடப்பா

நற்கதியினை ஈந்திடப்பா

நல்லாட்சி மலர்த்திடப்பா

நலன்கள் பல சேர்த்திடப்பா

ஞானத்தின் புதல்வனே, ஞானமிகு வேலவனே

ஞாயிறின் மைந்தனே நர்த்தனம் புரிபவனே

கந்தனே கடம்பனே கார்த்திகை வேலனே

கதிரொலியால் நிறைந்தவனே

காலத்தினை வென்றவனே

கருமங்கள் நீக்கிடுவாய்

ஆன்மாவைக் காத்திடுவாய்

அன்னையரை அரவணைத்தே

அருள்மழை பொழிந்திடுவாய்.

Gnanalayam

அன்னையரே அன்னையரே

ஆருயிர் அன்னையரே

எண்ணமது ஈடேற ஏகாந்தம் நிலைத்திருக்க

எமதாற்றல் பகிர்ந்திடுவோம்

எழிலுருவாய் வீற்றிருப்போம்

மலர்கள் யாவும் மலர்ந்திருக்க

வண்டுகளும் ஈர்த்திருக்க

தேனமுதம் பருகிடுமாம்

தேவநிலை எய்திடுமாம்

வண்ணங்கள் சேர்த்திடுமாம்

வானுலகம் வியந்திடுமாம்

வரைமுறைகள் கடந்திடுமாம்

வனஈசன் ஆலயமாம்

நிலைகள் யாவும் உயர்ந்திடுமாம்

நீர் நிலையும் பெருகிடுமாம்

நிலமங்கை மகிழ்ந்திருக்க

நஞ்சுகளும் அகன்றிடுமாம்

சூட்சுமங்கள் புலப்படுமாம்

சூன்யமுமே வசப்படுமாம்

சூரியனே ஈசன் எனில்

சூழ்ந்திடுமாம் சுகநிலைகள்.



Gnanalayam

அன்னையே, மானுட ஆன்மாக்களின் விடுதலை என்பது எளிதான செயலல்ல, நஞ்சுகளை அகற்றி நல்லாற்றல்களைப் பெருக்கி, ஆன்மாவினை விடுவித்திட அகத்திய மகானே போராடி வருகின்றார். இன்ப நிலை பெருகிடவும், ஈசநிலை உணர்ந்திடவும் ஆன்மாக்கள் உருகிடல் வேண்டும். எண்ணங்கள் தூய்மையுற்றால் மனமானது செம்மையுறும். சிரசானது தூய்மையுற்றால் ஆன்மாவும் செம்மையுறும்.

கலியுகத்தின் எல்லையிலே வாழ்கின்ற மானுட ஆன்மாக்கள் ஆறுமுகனாகிய யாம் உரைப்பதைனப் பாங்குடனே ஏற்றிடல் வேண்டும். ஆன்மாவின் விடுதலை என்பதே வாழ்வின் குறிக்கோள் எனில் அதனை எய்திட உதவிடும் ஒவ்வொரு ஆன்மாவினையும் போற்றிடல் வேண்டும். விடுதலை கண்ட ஆன்மாக்கள் மேன்மை நிலைதனை எய்திட போராடிடல் வேண்டும்.

கலியுகம் என்பதே நஞ்சிற்கும், நல்லாற்றல்களுக்கும் இடையே நிகழ்ந்திடும் போராட்டம் எனில் வென்று நின்றிட, நல்லாற்றல்களைப் பெற்றிட இறையருளானது ஈர்க்கப்படல் வேண்டும். தவிப்புற்று நின்றிடும் ஆன்மாக்களின் நிலை கண்டு, மீட்டிடவே போராடும் நிலை கொண்ட அகத்திய மகானுக்குத் துணை புரியும் ஆற்றல்களாய் உடன் இணைந்திட்டே செயல்புரிவர் உயர் ஆன்மாக்கள் பலர்.

வட்டங்கள் ஆறும் மலர்ந்து மணம் வீசிட, கலச ஆற்றலும் பெருகிட இணைந்திடவே காத்துள்ள உத்தம ஆன்மாக்கள் அனைத்தும் சத்திய நிலைதனை உணர்ந்திடல் வேண்டும். காலம் என்பது குறுகிய நிலையில் விழிப்புணர்வு கொண்டிடல் வேண்டும். ஆன்மாக்கள் மீண்டும் பிறப்பெய்திட அனுமதித்தால் ஆகாது. தத்தம் ஆன்மாக்கள் விடுதலை கண்டால் மண்ணுலகும், விண்ணுலகும் மகிழ்ந்திருக்கும் என்பதனை மானிடர்கள் உணர்ந்திடல் வேண்டும். போராட்டம் என்பது தொடர்ந்திட்டால் எல்லையில் அழிவு ஒன்றே நிகழ்ந்தேறிடும்.

ஆன்ம விடுதலை என்பது யாது? என்றே சிந்தனைபுரிந்திடும் மலர்களே, விழிப்புணர்வு கொண்டு, மறை பொருளாய் விளங்கிடும் உயிர் எனும் அணுவினை உணர்வதே ஆன்ம விடுதலையாகும். அறியாமை எனும் பருவ நிலையில் சிக்குண்டு

வாழ்வதினால் பலனேதுமில்லை, அறிவினை உயர்த்திட ஞானம் மலர்ந்திடும். முயற்சிகள் ஏதுமின்றி, இயற்கையின் துணை கொண்டு தீவினைக் கழிவுகளை அகற்றி ஈச தரிசனம் காண்பதே ஆன்ம விடுதலையாகும்.

அகத்திய மகானின் அருள் எனும் காந்த ஆற்றலின் துணை கொண்டு மலர்கின்ற ஒவ்வொரு மலர்களின் சிரசானதும் தூய்மையுறுவது ஓர் அபூர்வ செயலாகும். கலி எல்லையில் இறை ஆற்றலின் துணை கொண்டு அகத்திய மகானால் விடுவிக்கப்படும் ஆன்மாக்கள் சத்ய யுகம்தனை மலர்த்திடவே உதவிடுவர்.

ஆன்ம விடுதலை என்பது இருவேறு சிந்தனைகளில் மாறுபட்ட பொருளினை நல்கிடும். ஆன்மா எனும் அணுவினை அறிவியல் பூர்வமாக அறிந்திட முனைந்திடும் மானிடர்கள் ‘மூலம்’ என்பது யாதென்றே அறிந்திடல் வேண்டும். மானுட பிறவி என்பது உடலினைச் சார்ந்தா அன்றி உயிரினைச் சார்ந்ததா என்ற சிந்தனையானது எழுச்சியுற்றால் ஆன்மாவானது புலப்படும். உடலினைப் பேணிட உயிர் என்பது நிலைத்திடுமோ எனும் சிந்தனையானது உயிரின் தன்மையினைப் புலப்படுத்தும்.

உடல் எனும் கருவியானது உயிரினால் ஆளப்படுகின்றது என்றும், உயிர் என்பதோ ஆன்மா என்றும் அழைக்கப்படுகின்றது என்பதனையும் ஏற்றிடும் தருணத்தில் ஆன்மாவினைக் குறித்த ஆராய்ச்சியானது தோன்றிடும். உடல் என்பது எவ்விதம் உருவாகின்றது என்பதனை அறிகின்ற மானிடர்கள் உயிர் எங்கு, எவ்விதம் உருவாகின்றது என்பதனை அறிய முற்படுவதில்லை.

உயிரின் வருகையும், பிரிவும் அறியப்படாத நிலையில் ஆன்மாவின் விடுதலையும் அறியப்படாத சூட்சமமாகவே அமைகின்றது. ஆன்மாவினை அறியாத மானிடர்கள் அதன் விடுதலையை எங்ஙகணம் உணர்த்திட இயலும்? எனினும் விடுதலை என்பதனை உயர் ஆன்மாக்கள் நல்கிடும் நிலையில் அதற்கான விளக்கங்களும் வழங்கப்படல் வேண்டும் என்ற உயரிய நோக்கின் அடிப்படையில் உரைப்பதனை ஏற்றிடல் வேண்டும்.

மலரவுள்ள ஏழாம் வட்ட ஆன்மாக்கள் பற்பல கூடிடும் தருணத்தில் உயர் ஆற்றல்களும் பெருகிடும், ஆலய மையமும் ஒளிர்ந்திடும். ஆன்ம விடுதலை என்பது நொடிப் பொழுதினில் ஈடேறிடும் எனினும் அதற்கான பூர்வாங்க பணிகள் குறித்தும் அறிந்திடல் வேண்டும். பல்வேறு பிறவிகளை மேற்கொண்ட உயிரானது மானுட பிறவிதனை ஏற்றிட்ட தருணம் முதல் தனது கருத்துகள்களைப் பிரித்தாண்டிடவே முனைகின்றது.

பஞ்ச மூலக்கூறுகள் எனப்படும் நில, நீர், காற்று, வெப்பம், ஆகாயம் ஆகியவை அனைத்தும் ஆன்மா கொண்டுள்ள அனைத்து பாதரசத் துகள்களிடமிருந்தும் விலகிடல் வேண்டும். அவை இயற்கையோடு இணைந்திடல் வேண்டும். நிர்மலத்தன்மை கொண்ட ஆன்மா ஒன்றே விடுதலைக்கு உகந்ததாகும். சிரசு எனப்படும் மூளையின் மத்தியில் அமைந்துள்ள உயிர்த்துகள்களாகிய பாதரசத்துகள்களை மானுடர்களால் அறிந்துவிட இயலாது. எனினும் உயர் ஆன்மாக்களால் அறிந்திட இயலும்.

ஐம்புலன்களையும் ஆண்டிடும் ஐந்துவித மூலக்கூறுக்களையும் இயற்கையோடு இணைத்திட முயன்றிடல் வேண்டும். ஆன்ம விடுதலை என்பது எத்தருணம் நிகழ்ந்திடும் எனில், மூலக்கூறுகள் அற்ற ஆன்மத்துகள்கள் முழுமையால் ஒருங்கிணையும் தருணமே என்றே உணர்ந்திடல் வேண்டும். ஆன்மத் துகள்கள் எனும் பாதரசத்துகளிலிருந்து மிக மிக நுண்ணிய ஐந்து வித மூலக்கூறுகளையும் பிரித்திடல் வேண்டும். ஆன்மாவின் துணை கொண்டே இச்செயல் ஈடேறும்.

விடுபட்ட ஒவ்வொரு துகள்களைக் கொண்டுமே விடுபடாத துகள்களின் மூலக் கூறுகளைப் பிரித்திட இயலும். எனில் நிகழ்வது யாது? விடுபட்ட துகள்களின் மூலம் ஆன்மாக்கள் யாவும் விடுவிக்கப்பட இயலாத இக்கலியின் சூழலில் உயர் ஆன்மாக்களின் ஆற்றலினைக் கொண்டு அகத்திய மகான் தனது விடுபட்ட ஆன்மத்துகளைக் கொண்டே வட்ட மலர்கள் என அறியப்படுகின்ற ஒவ்வொரு

ஆன்மாவின் துகள்களையும் தூய்மையுறுத்தி விடுவிக்கின்றார். இதனை நன்கு உணர வேண்டும்.

இரண்டாம் பிரிவு மானிடர்கள் இதனை அறிவியல் மார்க்கத்தில் உணர இயல்வதில்லை எனினும் பணிவு நிலை ஓங்கிட சிரசினிலே அகத்திய மகானின் ஆற்றல்களை உணர்ந்திடல் வேண்டும். ஏழாம் வட்டம் என்பது சிறப்பு வாய்ந்த ஓர் நிலையாகும். ஆற்றல்களை நல்கிட பல உயர் ஆன்மாக்கள் கூடியே செயல்புரிகின்றனர்.

ஆறுமுகனார் என்றே அறியப்படுகின்ற எமதாற்றல்கள் முழுமையாகப் பகிரப்படுகின்ற நிலையில் விடுதலை அடையக் காத்துள்ள ஆன்மாக்கள் எமது ஆற்றலை உணர்வலைகளாய் ஏற்றிட முயன்றிடல் வேண்டும். விடுதலை அடைந்திடக் காத்துள்ள ஏழாம் வட்ட மலர்கள் தனது சிரசினில் ஏற்படுகின்ற ஆற்றல் மாற்றங்களை அதிர்வலைகளின் மூலம் உணர்ந்திடல் வேண்டும்.

சிரசில் ஒளி கூடுவதனையும், அணுக்களின் மூலக்கூறுகளிலே உருவாகின்ற மாற்றங்களையும் உணர்ந்திடல் வேண்டும். ஒளிச் சிதறல்களை நன்கு உணர முடியும், மேலும் எண்ணங்களில் மெருகு கூடுவதனையும் அன்பானது ஊற்றாகப் பெருகுவதனையும் நன்கு உணர வேண்டும்.

உணர இயலவில்லை என்றே உரைப்போரும் சிந்தனைகளில் மாற்றம் கொண்டு ஆழ்ந்து தியானித்து அகத்திய மகானையும் ஆறுமுகனாரையும் துதித்திடல் வேண்டும். ஆன்ம விடுதலை என்பது எவ்விதம் நிகழ்ந்திடும் என்றே ஆராய்தல் நன்றே எனினும் தீர்வுகளைக் காண்பது நன்றன்று. நிகழ்வது அனைத்தும் ஈசனின் செயல் என்றும் அகத்தீசனின் செயல் என்றும் உணர்வது உத்தமம்.

அகத்திய மகான் என்றே யாம் உரைத்திட்டாலும் தொழுது ஏற்றிடும் தெய்வங்கள் துணை புரியும் என்றும், உயர் ஆன்மாக்களாய் ஆலயத்திலே

வீற்றுள்ள ஒவ்வொரு சக்தி நிலையும் நல்லாற்றல்களைப் பகிர்ந்திடும் என்றுமே உணர வேண்டும்.

கலியுகத்தின் எல்லையில் நிகழ்கின்ற இந்நிகழ்வானது மாயைகளால் சூழப்பட்டு செயல்புரியும் மானிடர்களுக்கு உணர்தலை நல்கிடாது, எனினும் அறிதலும், புரிதலும் சுய முயற்சி கொண்டே ஏற்கப்படல் வேண்டும். மானுட ஆன்மாக்கள் பல விடுதலை அடைவது என்பது ஓர் உயரிய நிகழ்வு என்றும் குருவின் துணை கொண்டு ஆற்றல் பரிமாற்றங்கள் பலவும் நிகழ்ந்தேறியது என்றும் உணர்ந்திடல் வேண்டும். கலி எனும் நஞ்சுகள் அகன்றிடவும் கலிவட்ட அணுக்கள் பிரிபடவும் தொடர் பிரார்த்தனைகள் புரிதல் வேண்டும்.

ஆன்ம விடுதலை எனும் நிகழ்வினை அகத்திய மகானே முன்னின்று நிறைவேற்றிடுவார் எனும் காரணத்தால் விரிவாக்கம்தனையே அவரே நல்கிடுவார் எவ்விதம் மானுட ஆன்மாக்கள் அன்னையால் தேர்வு செய்யப்பட்டனர் என்றும் ஊடே இணைந்து ஆற்றல்களை நல்கியே செயல்புரிந்த சிரசமர்ந்த ரிஷிகளின் நிலையும் உணர்த்தப்படும். மேலும் ஆன்மாக்கள் எவ்விதம் விடுதலை அடைவர், சிரசமரவுள்ள ஆற்றல்கள் என்போர் குறித்தும், சித்தர்களின் நிலை குறித்தும், வினாக்களுக்கு விடையளித்திட அகத்திய மகானே முன்வருவார்.

அன்னையே, குருவாய் செயல் புரிந்து பற்பல இன்னல்களையும் ஏற்று, மலர்கின்ற ஆன்மாக்களின் கர்மவினைப் பதிவுகளை தீட்சைகளின் மூலம் அழித்து ஆண்டிட்ட காரணத்தால் ஆன்மாக்களின் தகுதி கூடியது. பற்பல கருத்துகள்களை பிரித்தே செயல்புரிந்திட்ட அன்னையானவர் நற்செயல்தனையே புரிந்திட்டார்.

கருக்கள் பலவும் பிரிபடுதல் எனில் அதற்குத் தேவையான உயர் எரிபொருள் நல்கப்படல் வேண்டும். ஆலய மைய ஜோதியிலே வீற்றிட்ட ஆன்மாக்கள் தத்தம் ஆற்றல்களை எரிபொருளாக நல்கியதன் மூலம், பல ஆன்மத்துகள்கள் பிரிபட்டன. இடைப்பாலமாய் செயல்புரிந்திட்ட அன்னையானவர் மானுட குலம் காத்திட பெரும் தொண்டு ஆற்றினார். இருப்பினும் பற்பல அணுக்களை மலரவுள்ள ஆன்மாக்களே

முயன்று பிரித்திடல் வேண்டும் என்பதனை அன்னையே உணர்த்திடல் வேண்டும். அகத்திய மகானின் துணை கொண்டு பிரிபட்ட பல ஆன்மத்துகள்கள் விடுதலைக்கு காத்துள்ளன என்பதனை உணர்ந்திட்டால் பிரிபடாத ஆன்மத்துகள்கள் எவ்விதம் சிரசினிலே சிக்குண்டுள்ளன என்பதனையும் உணரலாம்.

புவியின் ஈர்ப்பு விசைக்கு ஆட்கொண்ட துகள்கள் எளிதினில் விடுபட இயலாது மேலும் அவை மாயைதனிலே விழ்ந்திட முயன்றிடும் எனினும் ஆன்ம விடுதலை என்பது நிகழ்ந்தேறிய பின்னர் விடுபடாத துகள்களும் எளிதாய் மேல் நோக்கியே ஈர்க்கப்படும்.

சிந்தனைகள் யாவும் ஈச தரிசனத்திலும், ஈசக்கலப்பினிலும் இணைந்தே நின்றிட்டால் ஆன்ம விடுதலையும் எளிதாகும் மேலும் மேன்மை நிலைகளும் உணரப்படும். ஒவ்வொரு விடுதலை அடைகின்ற ஆன்மாக்களும் தத்தம் சிரசினைத் தூய்மையுறச் செய்திடல் வேண்டும். எண்ணங்களை நல்வழியில் செலுத்தி சொற்களையும் செயல்களையும் புனிதமடையச் செய்திட்டால் ஆன்ம விடுதலை என்பதும் ஓர் உயரிய நிகழ்வாக மலர்ந்திடும்.

அகத்திய மகானின் துணை கொண்டு ஆன்மாக்கள் எவ்விதம் விடுதலை அடைவர் என்றும், ஒளிப்பாலப் பயணம் குறித்தும் விண்ணேற்ற நிகழ்வு குறித்தும், ஈசக்கலப்பு குறித்தும் ஒவ்வொரு ஆன்மாக்களும் உணர்வு நிலை கொண்டே ஏற்றிடல் வேண்டும்.

அன்னையே, இந்நிகழ்வு என்பது கலசத்தின் வித்துகளின் தேர்வு எனினும் ஒவ்வொரு ஆன்மாவும் புனிதமடையும் நிகழ்வு என்பதனையும் உணர வேண்டும். தொடர் செயலாய் ஆற்ற வேண்டியது யாது என்றும் சிரசமர்ந்து விடுவித்திட காத்துள்ள உயர் ஆன்மாக்கள் குறித்தும் அகத்திய மகானே முன் நின்று உரைத்திடுவார் என்றுணர்க.

குருவெனும் நிலையில் செயல் புரிந்து ஏழு வட்ட மலர்களும் விடுதலை அடைந்திட உதவிடும் அன்னை தன்னிலையிலும் உயரிய மாற்றத்தினைக் காண்பார். எண்ணங்களும், செயல்களும், சொற்களும் புனிதமடையக் காண்பார். ஏழு திரைகளும் விலகிய நிலையில், உயிரின் கூடும் கரைந்திட்ட நிலையில் தன்னிலை உணர்வார். உயர் நிலைகளை அடைவார். ஒவ்வொரு நிகழ்வும் ஈசனின் ஆற்றலினால் நிகழ்கின்றது என்பதனை உணர்ந்து உயர் நிலைகளை எய்திடுங்கள்.

Gnanalayam